# 5வது சிறுவழக்குகள் நீதிமன்றம்

## ( மோட்டார் வாகன விபத்து வழக்குகள் தீர்ப்பாயம், சென்னை)

## MCOP No.3353/2024

| சாட்சியின் வரிசை எண் | மசா1 |
|---|---|
| பெயர் | மோகன்ராஜ் |
| க/த.பெயர் | ராஜேந்திரன் |
| வயது | 35 |
| விலாசம் | கோடம்பாக்கம், சென்னை |
| தொழில் | ... |

சாட்சி அமர்வு எழுத்தரால் உறுதி மொழி சட்டம் 1969 ன் பிரிவு 6ன் படி சத்திய பிராமணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியம் இன்று 24.06.2026 ல் பதிவு செய்யப்பட்டது.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. விபத்தில் அடிப்பட்ட நபர் என் மகன் என்றால் சரிதான். அவருக்கு வயது 1 வயது 8 மாதம் என்றால் சரிதான். விபத்து நடந்த சாலை மெயின் ரோடு என்றால் ஆம். ஒரு ஈச்சர் வாகனம் மட்டும் தான் செல்லமுடியும். அந்த சமயத்தில் என் மகன் சாலையில் விளையாடிக் கொண்டிருந்தானா என்றால் இல்லை. என் தந்தையுடன் கோவிலுக்கு சென்றுவிட்டு நடந்து வந்தபோது சாலையை கடந்த சமயத்தில் ஈச்சர் வாகனத்தின் டயரில் மாட்டிக்கொண்டார். மசாஆ3 ன் படி விட்டின் முன் நின்று கொண்டிருந்த போது விபத்து நடந்ததாக உள்ளது ஆனால் நான் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கோவிலின் அருகில் தான் என் வீடு. குழந்தையுடன் அந்த சமயத்தில் பெரியவர்கள் யாரும் இல்லை குழந்தை தனியாக இருந்த போது அஜாக்கிரதையாக இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் தவறு. விபத்தில் ஈடுபட்டது ஈச்சர் வாகனம் என்று சொல்லியுள்ளேன் என்றாலும்

மசாஆ 5 மற்றும் மசாஆ6ன் படி GVW அடிப்படையில் கனரக வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் இருந்தால் மட்டும் தான் அந்த வாகனம் ஓட்ட முடியும் என்றாலும் 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு இலகுரக வாகனம் ஓட்டுநர் உரிமம் மட்டும் தான் இருந்தது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாத காரணத்தினால் அவர் தான் இழப்பீடு கொடக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

2. இந்த விபத்து 2019க்கு பிறகு நடந்துள்ளதால் 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவரல்ல என்றால் சரியல்ல. மசாஆ11 மருத்துவ பில்கள் மருத்துவ காப்பீடு மூலம் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. மசாஆ11 ல் கிரடிட் நோட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது அதில் ரூபாய் 57,481/ என்ற அளவிற்கான பில் தொகை கழிக்கப்பட்டதால் அந்த தொகை நான் சேர்க்கமுடியாது என்றாலும் அது குறித்து மருத்துவமனை தரப்பு அலுவலரை அழைத்து விசாரித்தால் தான் உண்மை நிலை தெரியும் என்றால் சரிதான். மோட்டார் வாகன அறிக்கை, வரைபடம், இறுதி அறிக்கை ஆகிய ஆவணங்கள் வழக்கிற்கு பாதகமாக உள்ளதால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வருமான இழப்பிற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பல்வேறு தலைப்புகளின் கீழ் நான் கோரியுள்ள இழப்பீடு தொகை மிக அதிகம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

X

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது,

**5 வது நீதிபதி**
**சென்னை**